6. உறுப்பினர்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கவிருக்கும் விருந்து இரத்து

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று மாலை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 7-00 மணிக்குமேல், மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு விருந்து ஒன்று தருவதாக ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதை அவை உறுப்பினர்கள் அறிவார்கள். நல்லுணர்வை, நல்லுறவை, சட்டப் பேரவை உறுப்பினர்களிடையே உருவாக்கும் பரஸ்பர நோக்கோடும், கருத்துகள், கொள்கை மாறுபாடு, அரசியல் கட்சிகளுக்குள் இருந்தாலுமகூட, மாண்புமிகு சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குள் இருக்க வேண்டிய நல்லிணக்கம், நல்லுணர்வின் அடிப்படையிலும், —on the basis of establishing cordiality between the Members— இப்படிப்பட்ட விருந்து தேவை என்பதனை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவையிலே தெரிவித்தார்கள். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள், இன்று முற்பகல் அப்படிப்பட்ட விருந்து வேண்டாம் என்ற நோக்கோடு ஒரு கருத்தை வெளியிட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எந்தவொரு நல்லுணர்வோடு எந்தவொரு நல்உள்ளத்தோடு, எந்தவொரு பரஸ்பர உணர்வு, சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குள் இருக்க வேண்டும் என்ற நோக்கோடு அதை அறிவித்தார்களோ, அதை வேண்டாம் என்ற முறையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹேமச்சந்திரன் அவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். இந்த நிலையில் இந்த விருந்து இன்று வேண்டாம் என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டு, அந்த விருந்து இன்று இரத்துச் செய்யப்படுகிறது என்பதனை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய மற்றும்...(குறுக்கீடு)

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: With due respect to the Hon. Chief Minister, எந்த உணர்வோடு இது ஏற்பாடு செய்யப்பட்டதோ, அதே உணர்வோடுதான் நானும் அந்தக் கோரிக்கையை வைத்தேன் என்பதைத் தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.